# நில ஆர்ஜித வழக்குகளுக்கான சிறப்பு சார்பு நீதிமன்றம், அரக்கோணம், ராணிப்பேட்டை மாவட்டம்.

முன்னிலை : **திரு. G. யுவராஜ், M.A., M.L.,**
சிறப்பு சார்பு நீதிபதி,
நில ஆர்ஜித வழக்குகளுக்கான சிறப்பு சார்பு நீதிமன்றம்,
அரக்கோணம், ராணிப்பேட்டை மாவட்டம்.

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 30–ஆம் நாள், திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண் 52/2026**

**(CNR No.TN-RP-07-000-060-2026)**

(அரக்கோணம் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண் 52/2024)

P. ஜெயசந்திரன் .. வாதி

எதிராக

S. தீனதயாளன் .. பிரதிவாதி

இவ்வழக்கானது கடந்த 27.03.2024 அன்று அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 01.04.2024 அன்று அந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 52/2024–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன்பின்னர் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி, ராணிப்பேட்டை அவர்களின் Dis. No. 6789/2025, நாள் 19.12.2025 தேதியிட்ட உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்ற உத்தரவிடப்பட்டு, வழக்குக் கோப்புக்களை இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்தபிறகு, கடந்த 28.01.2026 அன்று இந்நீதிமன்ற அசல் வழக்கு எண் 52/2026–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ள இவ்வழக்கின் மீதான விசாரணையானது கடந்த 26.03.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள். P. ராமமூர்த்தி மற்றும் G. ஆனந்தன் ஆகியோர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள். K. சரவணன், V. ஹரிகிருஷ்ணன், V. சதீஷ் மற்றும் N. பிரபு குமார் ஆகியோர்கள் ஆஜராகியும்,

வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தையும், குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களையும், வழக்கு ஆவணங்களையும் பரிசீலனை செய்தும், வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

தாவா தொகை ரூ.8,47,200/−ஐயும் மற்றும் தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை பிறப்பிக்கும் நாள் வரை அசல் தொகை ரூ.3,00,000/−க்கு ஆண்டுக்கு 24 சதவிகித வட்டியுடனும், அதற்கு பின்னிட்டு தொகை முழுவதும் வசூலாகும் நாள் வரை 6 சதவிகித வட்டியுடனும் சேரும் தொகையையும், வழக்கு செலவுத் தொகையையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த உத்தரவிடக் கோரி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. **தாவாவின் சுருக்கம் :** பிரதிவாதி கடந்த 10.05.2016 அன்று வாதியிடமிருந்து ரூ.3,00,000/−ஐ கடனாக பெற்றுக்கொண்டு அந்த தொகையை ஆண்டுக்கு 24 சதவிகித வட்டியுடன் கேட்கும்போது திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டு பணத்தை பெற்றுக்கொண்டு அதே தேதியில் வாதியின் பெயருக்கு ஒரு கடனுறுதிச் சீட்டினை எழுதிக்கொடுத்தார். அதன்பிறகு, மேற்படி கடனின் ஒரு பகுதியை திருப்பி செலுத்தும் பொருட்டு கடந்த 20.01.2019 அன்று ரூ.10,000/−ஐயும், 19.12.2021 அன்று ரூ.10,000/−ஐயும் வாதிக்கு செலுத்தி அவைகளை கடனுறுதி சீட்டின் பின்புறம் மேற்குறிப்பு செய்துக் கொடுத்துள்ளார். அதன் பிறகு மேற்படி தொகைக்கான மீதி பணத்தை வாதிக்கு, பிரதிவாதி திரும்ப செலுத்தாமல் காலம் கடத்தி வந்தார். எனவே, வாதி கடந்த 06.03.2024 அன்று பிரதிவாதிக்கு, வாதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார். அந்த அறிவிப்பை கடந்த 08.03.2024 அன்று பெற்றுக்கொண்ட பிறகும் பிரதிவாதி

பணத்தையும் செலுத்தவில்லை, பதிலையும் அனுப்பவில்லை. பிரதிவாதிக்கு பல லட்சம் மதிப்பில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் உள்ளது. மேலும் பிரதிவாதி நெமிலி ஊராட்சி ஒன்றிய துணை தலைவராகவும் உள்ளார். மேலும் பிரதிவாதி வியாபாரம் செய்து அதன் மூலம் மாதம் ரூ.30,000/–ம் வரை சம்பாதிக்கின்றார். எனவே, கடன் நிவாரண சட்டங்கள் எதுவும் பிரதிவாதிக்கு பொருந்தாது. எனவே, மேற்படி தொகையை திரும்ப செலுத்தக்கோரி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. <u>**பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையின் சுருக்கம்:**</u> தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. தாவாவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவைகள், அவைகளை வாதியே சட்டப்படி நிரூபிக்க வேண்டும். கடந்த 10.05.2016 அன்று வாதியிடமிருந்து, பிரதிவாதி ரூ.3,00,000/–ஐ கடனாக பெற்றுக் கொண்டதையும், அதன் பிறகு 20.01.2019 அன்று ரூ.10,000/–ஐயும், 19.12.2021 அன்று ரூ,10,000/–ஐயும் வாதிக்கு கொடுத்து கடனுறுதி சீட்டில் மேற்குறிப்புகள் செய்துக் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளதும் உண்மை. 06.03.2024 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை, 08.03.2024 அன்று பெற்றுக் கொண்டதாக சொல்லியுள்ளதும் உண்மை. மேற்படி கடனுறுதி சீட்டில் 19.12.2021 தேதிக்கு பின்னிட்டு செய்த மேற்குறிப்புக்கு பிறகு அசல் மற்றும் வட்டியை வாதிக்கு, பிரதிவாதி முழுவதும் செலுத்திவிட்ட பிறகு, பிரதிவாதியிடமிருந்து மேலும் பணம் பறிக்க வேண்டும் என்று வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதிக்கு செலுத்த வேண்டிய பணத்தை ஏற்கனவே திருப்பி செலுத்திவிட்ட காரணத்தினாலேயே மேற்படி அறிவிப்புக்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. எனவே, வாதிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை பிரதிவாதி திருப்பி செலுத்திவிட்டதால், வாதி இவ்வழக்கு தாக்கல் செய்ய வழக்கு மூலமே இல்லை. எனவே, தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கின் வழக்குரை, பதிலுரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கடந்த 27.10.2025 அன்று கீழ்க்கண்ட வழக்கெழு வினாக்கள் வனையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. | Whether the Plaintiff is entitled to recover a sum of Rs.8,47,200/- along with interst for sum of Rs.3,00,000 capital? |
| 2. | To what other relief? |

5. இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி திரு. ஜெயசந்திரன் அவர்கள் தனது வழக்குரையை சார்ந்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து தன்னை வா.சா.1–ஆக விசாரித்துக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். வாதி தரப்பில் வா.சா.1–ன் மூலம் வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ5 வரையான சான்றவாணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. பிரதிவாதி தரப்பில் சாட்சியம் அளிக்க போதிய அவகாசம் அளித்தும், எவ்வித வாய்மூல சாட்சியமோ, ஆவண சாட்சியமோ முன்னிடப்படவில்லை.

7. வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், பிரதிவாதி கடந்த 10.05.2016 அன்று தனது அவசர தேவைக்காக வேண்டி வாதியிடமிருந்து ரூ.3,00,000/–ஐ கடனாகப் பெற்றுக்கொண்டு, அக்கடனை ஆண்டுக்கு 24 சதவிகித வட்டியுடன் திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு வாதியின் பெயருக்கு வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அதன் பின்னிட்டு மேற்படி கடனின் ஒரு பகுதியை திருப்பி செலுத்தும் பொருட்டு கடந்த 20.01.2019 அன்றும், 19.12.2021 அன்றும் தலா ரூ.10,000/–ஐ வாதிக்கு செலுத்தி, வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டில் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 மேற்குறிப்புகளை செய்துள்ளார் என்றும், அதன் பின்னிட்டு மீதி பணத்தை திருப்பி செலுத்தாததால் வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை வா.சா.ஆ.5–ன் மூலம் பிரதிவாதி பெற்றுக்கொண்டும் பணத்தையும் திருப்பி

செலுத்தவில்லை, பதிலும் அனுப்பவில்லை என்றும், வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டை எழுதிக் கொடுத்ததைப் பொறுத்தும், வா.சா.ஆ.2, 3 மேற்குறிப்புகளை செய்ததைப் பொறுத்தும் பிரதிவாதி தனது பதிலுரையில் குறிப்பிட்டு ஒப்புக்கொண்டுள்ள நிலையில், அக்கடனை திருப்பி செலுத்திவிட்டதாக கூறியுள்ள நிலையில், அதுபோன்று அக்கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்பதை பிரதிவாதி தரப்பில் எவ்வித வாய்மூல சாட்சியம் மூலமாகவோ, ஆவண சாட்சியம் மூலமாகவோ நிரூபிக்கவில்லை என்றும், எனவே, வாதி வழக்கில் கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றும் வாதிட்டார்.

8. பிரதிவாதி தரப்பு வாதத்திற்கு போதிய வாய்ப்பளித்தும், எவ்வித வாதுரையையும் முன் வைக்கவில்லை. எனவே, இவ்வழக்கில் தகுதியின் அடிப்படையில் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

9. வாதி தரப்பு வாதங்கள், ஆவணங்கள், சாட்சியங்கள், நன்கு பரிசீலிக்கப்பட்டது.

10. <u>1 முதல் 3 வரையான எழுவினாக்களுக்கான தீர்வு:</u> வாதியிடமிருந்து இவ்வழக்கின் பிரதிவாதி கடந்த 10.05.2016 அன்று ரூ.3,00,000/-ஐ ஆண்டுக்கு 24 சதவிகித வட்டியுடன் திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு பணத்தை பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டினை எழுதிக்கொடுத்து, அதன்பின் 20.01.2019 மற்றும் 19.12.2021 அன்று தலா ரூ.10,000/-ஐ செலுத்தி வா.சா.ஆ.2, 3 மேற்குறிப்புகளை செய்துக் கொடுத்துள்ளதாகவும், பின்னிட்டு மீதி பணத்தை திருப்பி செலுத்தாததால் கடந்த 06.03.2024 அன்று வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை, வா.சா.ஆ.5-ன் மூலம் பெற்றுக்கொண்டும் பிரதிவாதி பணத்தை திருப்பி செலுத்தாததால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக வாதி தரப்பு வழக்கும், சாட்சியமும், வாதமும் அமைந்துள்ளது.

11. இவ்வழக்கின் வாதி வா.சா.1–ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியமளித்துள்ளார். 10.05.2016 தேதியிட்ட கடனுறுதிச் சீட்டு வா.சா.ஆ.1–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டினை ஆய்வு செய்கையில், பிரதிவாதி, கடந்த 10.05.2016 அன்று வாதியிடமிருந்து ரூ.3,00,000/–ஐ அவரது தொழில் நிமித்தமாகவும், குடும்ப செலவுக்காகவும் வேண்டி வாதியிடமிருந்து கடனாக பெற்றுக்கொண்டு, அந்த பணத்தை ஆண்டுக்கு 24 சதவிகித வட்டியுடன் திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு கடனுறுதிச் சீட்டினை எழுதிக் கொடுத்துள்ளது தெரிய வருகின்றது.

12. அதேபோல், வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 மேற்குறிப்புக்களின் மூலமாக, கடந்த 20.01.2019 அன்றும், 19.12.2021 அன்றும் மேற்படி கடனின் ஒரு பகுதியாக, தலா ரூ.10,000/–ஐ வாதிக்கு செலுத்தி அதற்கான மேற்குறிப்புகளை செய்து கையொப்பமிட்டுள்ளதையும் அறிய முடிகின்றது. இவ்விடத்தில், பிரதிவாதியின் பதிலுரையின் பத்தி 2–ல் கூறியுள்ள சங்கதிகளை காண்பது அவசியமாகின்றது.

> ***2. The allegation in para 1 of the plaint it is admitted that the sub borrowed on 10.05.2016 Rs.3,00,000/- and it is further submitted towards the above said pronote this defendant paid Rs.10,000/- on 20.01.2019 and another sum of Rs.10,000/- on 19.12.2021, which were made endorsement on the back side of the pronote, as alleged in para 2 of the plaint'.***

என்று கூறியுள்ளார். ஆக, வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டினை எழுதிக் கொடுத்ததையும், அதில் கண்ட தொகையை பெற்றுக்கொண்டதையும், கடனின் ஒரு பகுதியை செலுத்தி வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 மேற்குறிப்புக்களை செய்துக் கொடுத்ததையும் பிரதிவாதியின் பதிலுரையில் குறிப்பிட்டு ஒப்புக்கொண்டுள்ளதை அறிய முடிகின்றது. எனவே, வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டினைப் பொறுத்து மேற்கொண்டு எதையும் நிரூபிக்க வேண்டிய கடமை வாதியின் மீது இல்லை.

13. பிரதிவாதியின் பதிலுரையில் கூறியுள்ள சங்கதிகளுக்கு முரணாக, வாதியான வா.சா.1–ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளதை காண முடிகின்றது. மேலும், பிரதிவாதியின் பதிலுரையின் பத்தி 3–ல் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளதையும் இவ்விடத்தில் காண்பது அவசியமாகின்றது.

> ***3. The allegation in para 3 of legal notice dated 06.03.2024, received by this defendant on 08.03.2024 also admitted, but the said notice issued on false grounds after discharge of the said pronote sum with interest after endorsement made on 19.12.2021, to the plaintiff by this defendant, on demand to return the pronote, the plaintiff postponing, and instead of returning the pronote, while discharged the said sum, the plaintiff in order to gain more money false filed the above suit, since which is an vexatious one'.***

என்று கூறியுள்ளார். ஆக, வா.சா.ஆ.3 மேற்குறிப்புக்குப் பின்னிட்டு வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டின் பேரில் செலுத்த வேண்டிய மீதி தொகையையும் செலுத்திவிட்டதாக பிரதிவாதி தரப்பு பதிலுரை அமைந்துள்ள நிலையில், அக்கடனை முழுவதும் திருப்பி செலுத்தியபோது ஏன் அதற்கான ரசீதை பெற்றுக்கொள்ளவில்லை என்பதற்கும், கடனுறுதிச் சீட்டையும் ஏன் திரும்ப பெற்றுக்கொள்ளவில்லை என்பதற்கும் எவ்வித விளக்கமும் பிரதிவாதியின் பதிலுரையில் சொல்லப்படவில்லை. அதைப் பொறுத்து சாட்சியமளிக்கவும் பிரதிவாதி முன்வரவில்லை. எனவே, வாதியிடம் வாங்கிய கடனை பிரதிவாதி தீர்த்துவிட்டார் என்ற பிரதிவாதியின் கட்சியில் உண்மையில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. இத்தீர்விற்கு ஆதரவாக, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 29.11.2024 அன்று ***A.S. No.57 of 2024 and C.M.P. No. 17931 of 2024, K. Shanthi Vs. K. Prema*** என்ற முன் தீர்ப்பு வழக்கின் பத்தி 19-ல் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளதை இந்நீதிமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

***19. As the Defendant had miserably failed to prove that she had discharged the debt with appropriate oral and documentary evidence, she is not entitled to any relief from this Court. After having not proved his claim of discharge, the Court need not show leniency or indulgence to the Defendant who had not discharged the burden cast upon him as per provision of the Indian Evidence Act. In the light of the rejection of the claim made by the Defendant, the Appeal is dismissed.***

என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மேற்படி முன் தீர்ப்பு வழக்கிலும், இவ்வழக்கைப் போன்றே தாவா கடனுறுதிச் சீட்டினை எழுதிக்கொடுத்ததை ஒப்புக்கொண்டுள்ள பிரதிவாதி, அக்கடனை திருப்பி செலுத்திவிட்டதாக எடுத்துள்ள கட்சியை உரிய ஆவணங்கள் மூலமாக நிரூபிக்கப்படாததால், பிரதிவாதியின் கட்சி நிராகரிக்கப்பட்டு, வாதி கோரியவாறு வழக்கில் தீர்ப்பாகியுள்ளதை அறிய முடிகின்றது.

14. வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டினை எழுதிக் கொடுத்ததையும், அதன் பேரில் ரூ.3,00,000/−ஐ வாதியிடமிருந்து பெற்றுக்கொண்டதையும், அதன் பின்னிட்டு வா.சா.ஆ.2 மற்றும் 3 மேற்குறிப்புக்களின் மூலம் தலா ரூ.10,000/−ஐ செலுத்தி கையொப்பமிட்டுள்ளதையும் பதிலுரையின் மூலம் ஒப்புக்கொண்டுள்ள பிரதிவாதி, அத்தொகையை திருப்பி செலுத்திவிட்டதாக கூறியுள்ளதை உரிய வகையில் நிரூபிக்காததால், வாதிக்கு ஆதரவாக தீர்ப்பளிக்க வேண்டியது அவசியமாகின்றது. எனவே, வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டின் பேரில் பெற்ற அசல் தொகையான ரூ.3,00,000/−ஐ வட்டி மற்றும் வழக்கு செலவுத் தொகையுடன் வாதி பெற உரிமையுள்ளவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து 1 முதல் 3 வரையான எழுவினாக்களுக்கு தீர்வு காணப்படுகின்றது.

15. இறுதியாக, தாவா கடனுறுதி சீட்டின் பேரில் செலுத்த வேண்டிய ரூ.8,47,200/−ஐயும், பின் வட்டியையும், வழக்கு செலவுத் தொகையையும்

செலுத்தக்கோரி வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது பகுதியாக அனுமதிக்கப்படுகின்றது. முடிவில், வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டின் பேரிலான அசல் தொகை ரூ.3,00,000/–ஐ கடனுறுதிச் சீட்டு எழுதிக்கொடுத்த 10.05.2016 தேதியிலிருந்து வழக்கு தாக்கல் செய்த நாள் வரை ஆண்டுக்கு 18 சதவிகித வட்டியுடனும், வழக்கிற்குப் பின்னிட்டு இன்றைய நாள் வரை ஆண்டுக்கு 12 சதவிகித வட்டியுடனும், தீர்ப்புக்குப் பின்னிட்டு தொகை முழுவதும் வசூலாகும் நாள் வரை ஆண்டுக்கு 6 சதவிகித வட்டி மற்றும் வழக்கு செலவுத் தொகையையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகின்றது. மேலும், பிரதிவாதி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில், வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3–ன் மூலம் செலுத்தியுள்ள ரூ.10,000/– + ரூ.10,000/–ஐ கழித்துக்கொண்டு, மீதமுள்ள தொகையை மூன்று மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இத்தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 30–ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.03.30 11:26:04 +0530

**சிறப்பு சார்பு நீதிபதி,**

நில ஆர்ஜித வழக்குகளுக்கான

சிறப்பு சார்பு நீதிமன்றம், அரக்கோணம்

**பிற்சேர்க்கை :**

**வாதி தரப்பு சாட்சிகள் :**

வா.சா.1 – திரு. ஜெயசந்திரன் (வாதி)

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :** இல்லை

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | |
|---|---|
| வா.சா.ஆ1 | 10.05.2016 தேதியிட்ட கடனுறுதிச் சீட்டின் அசல் |
| வா.சா.ஆ2 | வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள 20.01.2019 தேதியிட்ட மேற்குறிப்பு |
| வா.சா.ஆ3 | வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள 19.12.2021 தேதியிட்ட மேற்குறிப்பு |
| வா.சா.ஆ4 | 06.03.2024 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ5 | அஞ்சல் ஒப்புகை அட்டை |

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

**<u>நீதிமன்ற சாட்சிகள்</u>** : இல்லை

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>** : இல்லை

YUVARAJ
Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.03.30 11:26:12 +0530

**சிறப்பு சார்பு நீதிபதி,**

நில ஆர்ஜித வழக்குகளுக்கான

சிறப்பு சார்பு நீதிமன்றம், அரக்கோணம்

**<u>சி.சா.நீ.ம., அரக்கோணம்</u>**

**அ.வ. எண் 52/2026**

சீரான / வரைவு தீர்ப்புரை

நாள் : 30.03.2026